அவர்கள் கலைந்து செல்வது முறையானது; நியாயமானது. ஊர்வலம் வந்தவர்கள் முறையீட்டிற்கு விவரங்கள் சொன்ன பிறகு, விளக்கம் அளித்தபிறகு கலைந்து செல்வது என்பது இல்லாமல், அவர்கள் கலைந்து செல்லாமல், அனைவரும் கோட்டைக்கு வந்தே திருவோம் என்று புறப்பட்டார்கள். போலீசார் தடை உத்தரவை அவர்களுக்கு ஞாபகப்படுத்தி நிறுத்தினார்கள். அவர்கள், மாணவர்கள் அணி அணியாக உள்ளே வரத் தலைப்பட்டார்கள். அப்படி அவர்கள் வருவதால் கலகம் விளையும், அமளி எழக்கூடும் என்று போலீசாருக்குத் தென்பட்டது. அவர்களுக்கு எப்படி இடம் கொடுக்க முடியும்? அப்பொழுது, மேல் அவை சுதந்திராக் கட்சி உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள்கூட, தான் வருவதற்கும் வழி இல்லாது, மவுண்ட்ரோட்டைச் சுற்றிப் போகும் வண்ணம் போலீசார் அவர்களைத் திருப்பி விட்டார்கள் என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு சங்கடமான சூழ்நிலை ஏற்பட, அணி அணியாக வந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்ட அனைவரும் எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல், கைது செய்யப்பட்டது பிற்பகல் ஒன்று அல்லது இரண்டு மணிக்கு என்றால், மாலை 5-30 மணிக்கெல்லாம் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆகவே, எந்த விதமான ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கும் அவசியம் இல்லை என்பதைக் கூறி, தங்களுக்கு நிலைமையை எடுத்துரைத்து அமைகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு முதல் அமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி தர மறுக்கிறேன்.

3. தன்னிலை விளக்கம்.

துணைக்கேள்விக்கு விடையளிக்கையில் தன்னைப்பற்றி முதலமைச்சர் கூறியது குறித்து திரு. க. கோமதிசங்கர தீட்சிதரின் விளக்கம்.

<u>திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:</u> சபாநாயகர் அவர்களே, ஒரு பர்ஸனல் எக்ஸ்ப்ளநேஷன். மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள், விபசாரம் பற்றி நான் ஒரு உப கேள்வி போட்டபோது, எனது பருவ நிலை பற்றிக் கூறினார்கள். தனிப்பட்ட முறையில் அவர்களை நான் அன்புடன் பாராட்டுகிறேன். ஆனால், மக்களுக்கு சேவை செய்யக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்வதைக் கவனிக்க வேண்டும். இந்த சென்னை நகர் நல்லபடியாக பாதுகாக்கப் படவேண்டும். அதற்கு வேண்டிய எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மாண்புமிகு முதல் மந்திரி எடுக்க வேண்டும். விபசார விடுதிகள் விஷயமாக நான் பல கடிதங்கள் எழுதியிருக்கிறேன். பத்திரிகைகளில் பார்க்கிறோம், பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களில் என்ன என்ன நடக்கின்றன என்று. அதுபோல சென்னை நகரமும், விபசார நகரமாகாமல், ஒரு சிறந்த நகரமாக இருக்க வேண்டும். வர, வர இங்கே விபசாரம் பெருகிக் கொண்டே வருகிறது. அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டு விட்டன. அதை வன்மையாக எதிர்த்து, நிச்சயமாகக் கண்டித்து, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சென்னை நகரத்தை நல்லபடி

[திரு. க. கோமதி சங்கர தீட்சிதர்] 1970 ஆகஸ்ட் 29

யாகப் பாதுகாக்க வேண்டும். அதில் என் பருவத்தைக் கருதாமல், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் தீட்சிதர் அவர்களுடைய பருவத்தைக் குறைகூறவில்லை. அவரிடத்தில் இருக்கும் அன்பு உரிமை காரணமாக சொன்னேன். அதை அவர்கள் வருத்தமாக எடுத்துக் கொள்ள வில்லை என்பது தெரியும். 70 ஆண்டு (குறுக்கீடு) ஆம், 80 ஆண்டு (திரு. என். எஸ். வி. சித்தன் : பத்து ஆண்டு குறைத்து இளைஞர் ஆக்குகிறீர்களே) 80-ம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிய போது நான் அவருக்குப் பொன்னாடை அணிவித்து, "80 வயது இளைஞர்" என்று குறிப்பிட்டேன். 80 ஆண்டுப் பருவத்திலும் நல்ல இளமையோடு சட்டமன்ற பணிகளை ஆற்றிவருகிறார்கள், அவர்கள் கூறிய சென்னை மாநகரம் புனிதமாக இருக்கவேண்டும் என்பதில் இங்கே மன்றத்தில் இருக்கிற வேறு யாருக்கும் இரண்டாவது கருத்து நிச்சயமாக இருக்க முடியாது.

ஆனால் வேறு மாநிலங்கள் கெட்டுப் போயிருக்கின்ற அளவிற்கு இந்த மாநிலம் கெட்டுவிடவில்லை. வேறு பல மாநிலங்களில் விபசாரம் சட்டரீதியாக அனுமதிக்கப்பட்டு, அவர்களை டாக்டர்கள் அடிக்கடி பரிசோதித்துப் பார்த்து, "நன்றாக இருக்கிறார்கள்" என்று சர்டிபிகேட் கொடுக்கும் நிலைமை இருந்து வருகிறது. பம்பாய் போன்ற இடங்களில் இதற்காக அழகுமிக்க தெருக்கள் எல்லாம் உருவாக்கப்பட்டு விபசாரம் பகிரங்கமாக நடைபெற்று வருகிறது. அந்தக் காலத்தில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முன்னிலையில் அதற்காக மறியலை நடத்தி, அந்த வீர மங்கையர் ஒரு பெரும் போராட்டமே நடத்தி, அதில் வெற்றியும் பெற்று, அந்த உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திற்குள்ளே, தமிழகத்திற்குள்ளே அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாதவாறு காப்பதில் இந்த அரசுக்கு எல்லாக் கட்சியில் உள்ளவர்களின் ஒத்துழைப்பும் மிகமிகத் தேவை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். திரு. தீட்சிதர் அவர்களுடைய பருவம் மட்டுமல்ல, அவருடைய ஆழ்ந்த அனுபவம், அறிவாற்றல் தொண்டு எல்லாவற்றையும் நான் மதிப்பவன். இதையே அவர் என்னுடைய விளக்கமாக எடுத்துக்கொள்வார்கள் என்று கூறி, அமர்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, நக்கீரர் அவர்கள் "திருமுருகாற்றுப்படையை" எழுதும்போது "மலைக் கிழவோனே" என்று எழுதி முடித்ததைக் கண்டதும் ஸ்ரீமுருகப் பெருமானுக்குக் கோபம் வந்துவிட்டதாம். அதுபோல் திரு. தீட்சிதர் அவர்களுக்கு அவருடைய பருவநிலையைப் பற்றிக் குறிப்பிட்டதும் கோபம் வந்து, "இவரைப்போய் பருவ நிலை கடந்தவர் என்று கூறியது எவ்வளவு தவறாகப் போய்விட்டது" என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை உணரும்படிச் செய்துவிட்டார். திரு. தீட்சிதர் அவர்களுடைய உண்மைநிலையை அறிய உதவிய முதலமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).